"DAILYTHANTHI"

PAGE NO: 10

DATE: 07.08.21

# கழிவுநீரை சுத்திகரிக்க புதிய தொழில்நுட்பம்

## பல்கலைக்கழக பேராசிரியர்கள் கண்டுபிடிப்பு

புதுச்சேரி, ஆக.7-

புதுவை காலாப்பட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு தரத்திலான மாசு கட்டுப்பாடு சுற்றுச்சூழல் பொறியியல் துறை செயல்பட்டு வருகிறது. இந்த துறை சார்பில் சுற்றுச்சூழல் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த துறையை சேர்ந்த பேராசிரியர்கள் அப்பாசி, கஜலட்சுமி, தஸ்னிம் அப்பாசி ஆகியோர் ஒன்றிணைந்து புதிதாக கழிவுநீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளனர். இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நீர்நிலைகளில் உள்ள மாசை முற்றிலுமாக அகற்றி மறு சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்த முடியும்.

புதுச்சேரி பல்கலைக்கழக வளாகம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உள்ள நீர்நிலைகளில் பல்வேறு ஆய்வுகள் செய்த பின்னரே இந்த நவீன தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் ஆறு, ஏரி மற்றும் குளங்களை மாசு இல்லாமல் பாதுகாக்க முடியும். குறைவான முதலீட்டில் நவீனதொழில்நுட்பத்தை உருவாக்கிய பேராசிரியர்களை துணைவேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.

"DINAMALAR"

PAGE NO: 01 DATE: 07.08.21

# புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் பேராசிரியர்களுக்கு துணைவேந்தர் பாராட்டு

**புதுச்சேரி, ஆக. 7–**

பல்கலையில் சுற்றுச்சூழல் கழிவுநீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் கண்டுபிடித்த பேராசிரியர்களுக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பன்னாட்டு தரத்திலான உள் கட்டமைப்பு ஆய்வுக்கூட வசதிகளோடு மாசு கட்டுப்பாடு சுற்றுச்சூழல் பொறியியல் துறை செயல்பட்டு வருகின்றது.

துறை பேராசிரியர்கள் அப்பாசி, கஜலட்சுமி மற்றும் தஸ்னிம் அப்பாசி ஆகியோர் புதிய சுற்றுச்சூழல் கழிவு நீர் சுத்திகரிப்பு தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

நீர் நிலைகளில் நீர் வீழ்ச்சித் தன்மை மற்றும் நிலப் பரப்பின் வேர்நிலைப் பகுதிகளில் காணப்படும் நீரோட்டத்தின் அளவீடுகளை வைத்தே பல்கலைக் கழகக் பேராசிரியர்களால் நவீன தொழில்நுட்பம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீர் நிலைகளிலுள்ள மாசுக்களை முற்றிலுமாக அகற்றி மறு சுழற்சி அடிப்படையில் மீண்டும் பயன்படுத்த முடியும்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தி இயற்கை வளங்களை பாதுகாக்க முடியும்.

நீர் நிலைச் சார்ந்த சுற்றுப்புறப்பகுதிகளை மாசின்றி பராமரிக்கலாம். பல்கலைக் கழகத்தை போன்ற பரந்த கல்வி வளாகங்கள் மற்றும் கிராமப்பறங்களில் ஆறு, ஏரி, குளங்களைப் பேணிக்காக்க முடியும். நீர் நிலைகள் வறண்டு போகாமல் பாதுகாக்க முடியும்.

குறைந்த முதலீட்டில் சுற்றுச் சூழல் கழிவு நீர் சுத்திகரிப்பு தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ள பேராசிரியர்களை துணை வேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.

"DINAMALAR"

PAGE NO: 01

DATE: 07.08.21

# தொலைதூர கல்வி இயக்கக தேர்வு முடிவுகள் வெளியீடு

**புதுச்சேரி, ஆக. 7–**

புதுச்சேரி பல்கலைக் கழக தொலைதூர கல்வி இயக்கக தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்கத்தின் எம்.பி.ஏ., மற்றும் பல்வேறு முதுநிலை, இளநிலை படிப்புகளுக்கு கடந்த ஜனவரியில் தேர்வு நடத்தப்பட்டது.

இதற்கான தேர்வு முடிவுகள் www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு மதிப்பெண்கள் ஒருமாத காலத்திற்குள் அனுப்பி வைக்கப்படும்.

அடுத்த பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்கத்தின் தேர்வுகள் இம்மாதம் இறுதியில் நடத்தப்பட உள்ளது.

இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

PAGE NO: 06

DATE: 07.08.21

# புதுவை பல்கலை தொலைதூரக்கல்வி தேர்வு முடிவு வெளியீடு

**புதுச்சேரி, ஆக. 7:** புதுச்சேரி பல்கலைக்கழக தொலைத்தூர கல்வியில் கடந்த ஜனவரி மாதம் எழுதிய தேர்வுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக தொலைத்தூர கல்வி இயக்ககம் மூலம் கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்ட எம்பிஏ, பட்டமேற்படிப்பு மற்றும் பட்டப்படிப்புகளுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. தேர்வு முடிவுகள் வெளியாகி குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு பிறகே மதிப்பெண் பட்டியல் வெளியாகும். அடுத்தக்கட்ட தேர்வுகள் இம்மாத இறுதியில் நடைபெறும். கூடுதல் விவரங்களை பல்கலைக்கழக இணையதள முகவரியில் *www.pondiuni.edu.in* தெரிந்து கொள்ளலாம்.

இத்தகவலை புதுவை பல்கலைக்கழக தொலைத்தூர கல்வி இயக்கக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

"DINAMANI"

PAGE NO: 02 DATE: 07.08.21

# புதுவை பல்கலை. தொலைநிலைக் கல்வி தேர்வு முடிவுகள் வெளியீடு

**புதுச்சேரி ஆக. 6:** புதுவை பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன.

அதன்படி, புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வியில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்புகளுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. தேர்வு முடிவுகள் வெளியாகி குறைந்தப்பட்சம் ஒரு மாதத்துக்கு பிறகே மதிப்பெண் பட்டியல் வெளியாகும். அடுத்த கட்டத் தேர்வுகள் வருகிற ஆகஸ்ட் இறுதியில் நடைபெறும்.

கூடுதல் தகவலறிய விரும்புவோர் பல்கலைக்கழக இணையமான www.pondiuni.edu.in பார்க்கலாம் என பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

"HINDUTAMIL".

DATE : 07.08.21

PAGE NO : 05

# புதுச்சேரி பல்கலை தொலைதூரக் கல்வி தேர்வு முடிவுகள் வெளியீடு

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வியில் கடந்த ஜனவரி மாதம் நடந்த எம்பிஏ, பட்டமேற்படிப்பு (Non semester pattern), பட்டப்படிப்புகளுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. தேர்வு முடிவுகள் வெளியாகி குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு பிறகே மதிப்பெண் பட்டியல் வெளியாகும்.

அடுத்தக் கட்டத் தேர்வுகள் ஆகஸ்ட் இறுதியில் நடைபெறும். மேலும் தகவல் அறிய விரும்புவோர் பல்கலைக்கழக இணையதளமான www. pondiuni.edu.in பார்வையிடலாம் என்று பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.